திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட

# திருநாவுக்கரசர் புராணம்

சித்திரக்கதை









திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு, சிங்கப்பூர்

திருச்சிற்றம்பலம்.

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் .

## திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர் புராணம்

திருக்கயிலையில் வாகீச முனிவராயிருந்தவர் திருநாவுக்கரசர். விண்ணிலிருந்து வந்து, மண்ணுலகில் திருநாவுக்கரசராய் கி.பி 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்து பல அருந்தொண்டுகள் செய்து, திருப்பூம்புகலூரில் சிவானந்த சோதியில் கலந்தார்.

நம்பியாண்டார் நம்பி அடிகளும், இராசராசசோழனும் நால்வர் மற்றும் பல அடியார்களின் தமிழ் அமுதினைப் பதினொரு திருமுறைகளாக தொகுத்தனர். பின்னர் அநபாயச் சோழன், சேக்கிழாரின் பெரியபுராணத்தையும் இணைத்து பன்னிரு திருமுறைகளாக ஆக்கினார்.

இவற்றுள் நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகள் திருநாவுக்கரசர் அருளிய பாடல்களைக் கொண்டவை. இவர் அருளிய பாடல்கள் தேவாரமாகக் கொள்ளப்படுகின்றன. பொதுவாகக் கூறும்போது மூவர் பாடிய பாடல்களையும் தேவாரமாகக் குறிப்பிடுவர். ஆனால் குறிப்பாகக் கூறும்போது ஞானசம்பந்தர் பாடல்களைத் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசர் பாடல்களைத் தேவாரம் என்றும் சுந்தரர் பாடல்களைத் திருப்பாட்டு என்றும் கூறுவர்.

திருச்சிற்றம்பலம்.



# திருநாவுக்கரசர் புராணம்

கிபி 600 முதல் 630 வரை உள்ள காலத்தில் தொண்டை நாட்டையும் நடுநாட்டையும் முதலாம் மகேந்திர பல்லவன் ஆண்டு வந்தார். நடுநாட்டில் சிறந்த நாடு திருமுனைப்பாடி. திருமுனைப்பாடி நாட்டில் உள்ள சிறந்த ஊர் திருவாமூர். இவ்வூரில் வேளாண் குடியில் உள்ள புகழனார், மாதினியார் தம்பதியரின் திருமகனாய் அவதரித்தார் திருநாவுக்கரசர். இவரது பிள்ளைத் திருநாமம் மருள்நீக்கியார் என்பதாகும். இவரது தமக்கையார் திலகவதியார் ஆவார்.



திலகவதியார் பன்னிரெண்டு வயது நிரம்பிய போது அவருக்கும் சைவக் குடும்பத்தில் பிறந்த படைத்தளபதி, கலிப்பகையார் என்பவருக்கும் திருமணம் செய்ய பெற்றோர்கள் ஏற்பாடு செய்தனர். திருமணத்திற்கு முன்பாக கலிப்பகையார் ஒரு போருக்குச் சென்றார். போரில் கலிப்பகையார் வீரமரணம் அடைந்தார். திலகவதியார் தம் மனதில் கலிப்பகையாரைக் கணவராக உறுதிசெய்து கொண்டமையால் கலிப்பகையார் மரணத்திற்குப் பிறகு வேறு திருமணம் செய்யாமல் சிவ கைங்கரியங்களை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்.



இதற்கிடையில் புகழனாரும் மாதினியாரும் இறைவனடி சேர்ந்தார்கள். திலகவதியார் தன் தம்பியைப் பேணி வளர்த்து வந்தார். நல்ல கல்வி அறிவும் ஒழுக்கமும் புகட்டி வந்தார்.




கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய மருள்நீக்கியார் சமணத்தைத் தழுவிக்கொண்டார். அருகிலுள்ள பாடலிபுத்திரம் நகருக்குச் சென்று சமணப் பள்ளியிலேயே தங்கிவிட்டார். இவரது வாதத்திறமையைக் கண்ணுற்ற சமணர்கள், இவருக்குத் தருமசேனர் என்ற பட்டமும் சூட்டிக் கொண்டாடினார்கள்.




தம்பியின் செயலைக் கண்டு மனம் நொந்த திலகவதியார், மனம் மிகவருந்தி, திருவதிகை ஆலயத் திருத்தொண்டிலேயே ஈடுபட்டார். தம்பியின் மனம் திருந்துவதற்காக, தினமும் இறைவனை வேண்டினார். இறைவனாரும் அவர் கனவில் தோன்றி, பெரும் சூலை நோயைக் கொடுத்து மருள்நீக்கியாரை ஆட்கொள்வதாக அருள்வாக்குக் கூறினார்.




இறைவனும் மருள்நீக்கியாரை ஆட்கொள்வதற்காக அவருக்குத் தீராத வயிற்றுவலியைக் (சூலை நோய்) கொடுத்தார். நோயைத் தீர்ப்பதற்காக சமணர்கள் தங்கள் மந்திரங்களை ஓதி மருத்துவம் செய்தனர். எந்த வகையிலும் நோயானது தீரவில்லை. சமணர்கள் மருள்நீக்கியாரைக் கைவிட்டு அகன்றனர்.



வலிதாங்க முடியாத மருள்நீக்கியார், தன் பணியாளரைத் தமக்கையிடம் அனுப்பி, அவரை அழைத்துவரச் சொன்னார். சமணப் பாழிக்குச் செல்ல திலகவதியார் விரும்பவில்லை. மருள்நீக்கியாரை திருவதிகை வருமாறு பணியாளரிடம் கூறி அனுப்பினார். எனவே மருள்நீக்கியாரே நேரில் வந்து தமக்கையைத் தொழுதார். தமக்கையார் அவர் கையில், திருநீறு அளித்து திருவதிகை ஆலயத்துக்கு அழைத்துச் சென்றார்.



மேனி எங்கும் நீறுபூசி, திருஅதிகை ஆலயத்திற்குச் சென்று இறைவனைத் தொழுதார் மருள்நீக்கியார். வயிற்று வலி தாங்க முடியாமல் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்று பாடினார். இவரது பாடலைக் கேட்டு இன்புற்ற சிவபெருமான் சூலைநோயை முழுவதுமாக நீக்கி, பின்னர் "நாவுக்கரசு என நயப்புற மன்னுக" என்று அருள்வாக்கு அருளினார். அன்று முதல் மருள்நீக்கியார் திருநாவுக்கரசர் என அழைக்கப்பட்டார்.



இவர் சைவ சமயம் திரும்பியதைக் கேள்விப்பட்ட சமணர்கள் மன்னனிடம் சென்று முறையிட்டனர். மன்னனும் சமண மதத்தவன், எனவே சமணர்களின் தூண்டுதலால், கோபமுற்ற மன்னன், நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்து நீற்றி விடுமாறு ஆணையிட்டான். நாவுக்கரசர் அப்போது “மாசில் வீணையும் மாலை மதியமும்” என்ற பதிகத்தைப் பாடினார். குளிர்ந்த நிலவாய் மாறிய சுண்ணாம்புக் காளவாயிலிருந்து ஏழு நாட்கள் கழித்து மகிழ்ச்சியாக வெளிவந்தார்.



இதைக் கண்டு ஆத்திரமடைந்த சமணர்கள் மன்னனிடம் சென்று அவர் ஏதோ மந்திரம் கற்றுத் தப்பி விட்டார் என்று சூது உரைத்தனர். மன்னன், பால்ச்சோற்றில் விஷம் கலந்து உண்ணச் செய்யுமாறு ஏவினான். நஞ்சும் அமுதாகும் எங்கள் நாதன் அடியார்க்கே என்று கூறி மகிழ்ச்சியுடன்விஷம் கலந்த பால்ச்சோற்றினை உண்டார். அவருக்குத் தீங்கு ஏதும் நேரவில்லை.



சமணர்கள் நாவுக்கரசர் மீது கொண்ட பொறாமை உணர்வால் மன்னனிடம் மீண்டும் சூது பேசி பட்டத்து யானையை அவர் மீது ஏவி, கொல்லும்படி ஏற்பாடு செய்தனர். நாவுக்கரசர் சிவபெருமானை நினைந்து “சுண்ண வெண் சந்தனச் சாந்தும்” என்ற பதிகம் பாடி வணங்கினார். கொல்ல வந்த யானை நாவுக்கரசரை வணங்கிவிட்டு சமணர்களைத் துரத்த ஆரம்பித்தது.




இதுவும் பலன் அளிக்காததால் அவரைக் கல்லோடு சேர்த்துக் கட்டி கடலில் எறிந்து விடவேண்டும் என்று மன்னரிடம் கூறி அவ்வாறே செய்தனர். திருநாவுக்கரசர், ”நமசிவாய” எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி “சொற்றுணை வேதியன்” என்ற திருப்பதிகம் பாடினார். அவருக்குத் தீங்கு ஏதும் நேராது கல்லோடு கடலில் மிதந்து வந்து திருப்பாதிரிப்புலியூர் என்ற திருத்தலத்திற்கு அருகே கரையேறினார். இறையருளோடு கரையேறிய திருநாவுக்கரசரைக் காண அடியார்கள் குழுமினர். எங்கும் “அரகர” என்ற ஒலி நிரம்பியது.



திருநாவுக்கரசர் பல சிவத்தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்தார். பின்னர் தூங்கானைமாடம் வந்தார். அங்குள்ள ஆலயத்திற்குள் சென்று “சமணமதத்தைத் தழுவிய இந்த உடல் புனிதம் அடைய என்மீது மூவிலைச் சூலமும் இடபமும் குறி என்று இறைவனை வேண்டி”, “பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்” என்று தொடங்கும் பாடலைப் பாடினார். சிவபெருமான் அருளினால் ஒரு சிவபூதம் வந்து அவர் தோள் மீது சூலக்குறியையும் இடபக் குறியையும் பொறித்தது. நாவுக்கரசர் “நான் உய்ந்தேன்” என்று கண்ணீர் மல்க எழுந்தார்.



பல சிவத்தலங்களுக்கும் சென்ற திருநாவுக்கரசர், ஞானசம்பந்தரைப் பார்க்கும் பேராவல் காரணமாகச் சீர்காழியைச் சென்றடைந்தார். திருநாவுக்கரசரைப் பார்க்கும் ஆவல் காரணமாக ஞானசம்பந்தரும் அடியார் கூட்டத்தோடு அவரை எதிர்கொண்டு வரவேற்றார். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரைப் பார்த்து “அப்பரே!” என்று அழைத்தார் திருநாவுக்கரசர் “அடியேன்” என்றார் அன்று முதல் திருநாவுக்கரசர் “அப்பர்” என்று அழைக்கப்பட்டார்.



ஞானசம்பந்தப் பெருமானிடம் விடைபெற்ற நாவுக்கரசர், பலத் தலங்களுக்குச் சென்று விட்டு திருநல்லூரை அடைந்தார். அங்கு எம்பெருமான் தமது பாதமலரைத் திருநாவுக்கரசரின் தலைமீதுச் சூட்டி அருளினார்.



பலத் திருத்தலங்களுக்குச் சென்ற திருநாவுக்கரசர் திங்களூர் வந்துசேர்ந்தார். வழி எங்கும் திருநாவுக்கரசரின் பெயரால் அன்ன சாலைகள் தண்ணீர்ப் பந்தல்கள் இருப்பதைப் பார்த்து வியந்து அச் செயல்களுக்குக் காரணமான அப்பூதியடிகள் என்ற சிவனடியார் இல்லத்தை அடைந்தார். இல்லம் தேடி வந்த தம் குருவாகிய திருநாவுக்கரசரை வணங்கினார். அவருக்கு அமுது படைக்க விரும்பினார் அப்பூதியடிகள்.



அப்பூதியாரின் மனைவி விதவிதமாக அமுது ஆக்கினார். பிறகு உணவளிக்க வாழை இலை பறித்து வருமாறு தனது மூத்த புதல்வன் மூத்த திருநாவுக்கரசர் எனப் பெயர் கொண்டவனைத் தோட்டத்திற்கு அனுப்பினார். தோட்டத்தில் இலை பறிக்கும்போது வாழைக்குருத்தில் இருந்த விஷ அரவம் (பாம்பு) அவனைத் தீண்டியது. விஷம் கொஞ்சம் கொஞ்சமாக ஏற மைந்தன் விரைந்து வந்து இலையைக் கொடுத்தபின் உயிரிழந்து வீழ்ந்தான் .



மகனின் இந்தக் கதியால் மனம் நொறுங்கிய பெற்றோர்கள் மைந்தனின் சடலம் அப்பரடிகளின் அமுதிற்குத் தடையாக இருக்கும் என்று கருதி சடலத்தை மறைத்தனர். பின் உணவு பரிமாறினர்.



இறைவனின் அருளால் அப்பரடிகள் இதனை உணர்ந்து கொண்டார். மகவிற்காக மனம் வருந்தினார். அவரது சடலத்தைத் திங்களூர் ஆலயத்திற்கு முன் கொண்டு வரச்செய்தார். அங்கு அவர் “ஒன்றுகொலாம்” எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். மாண்ட அப்புதல்வன் மீண்டும் உயிர் பெற்றான். அப்பர் பெருமான் மீண்டும் அவ்வீட்டிற்குச் சென்று அமுது உண்டார்.



திருநாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் திருப்புகலூரில் மீண்டும் சந்தித்துத் தொண்டர்களை மகிழ்வித்தனர். பின்னர் பலத் தலங்களுக்குச் சென்றுவிட்டு திருவீழிமிழலை வந்தனர். அச்சமயம் பருவம் தப்பி அவ்விடத்தில் பஞ்சம் ஏற்பட்டது. அப்பதிவாழ் அடியார்களுடைய பஞ்சம் தீர்க்க இறைவனை வேண்டினார்கள். இவர்கள் இறைவனை வழிபடும்போது ஆளுக்கு ஒரு தங்கக் காசு வீதம் படியில் இருக்கும். அதை எடுத்துப் பஞ்சம் போக்கினர். நாவுக்கரசரின் கைத்தொண்டு காரணமாக அவரது காசு சற்று மிகை மதிப்பானது. பின்னர், ஞானசம்பந்தர் "வாசி தீரவே" என்ற பதிகம் பாடி வாசியில்லா காசுப் பெற்றார். இருவரும் அடியார்களுக்கு திருவமுதளித்து எழுந்தருளியிருந்தனர். சிலநாள்களில் பஞ்சம் நீங்கிற்று .



இருவரும் திருமறைக்காடு வந்தனர். அங்கு ஆலயத்தின் திருக்கதவம் மூடப்பட்டிருந்தது. முன்னொரு காலத்தில் வேதங்கள் இவ்வாலயத்திற்கு வந்து பூஜித்து விட்டுக் கதவை அடைத்துவிட்டு சென்றன. அதன்பின் கதவு திறக்கப்படவில்லை. வேறு வழியாகத்தான் அடியார் பெருமக்கள் சென்று இறைவனைத் தரிசித்தனர். அப்பரும் ஆளுடைப் பிள்ளையும் அங்கு வந்தபோது பக்த பெருமக்களின் மனக்குறை தீர்க்க எண்ணினார்கள். அப்பரடிகள் “பண்ணினேர் மொழியாள்“ என்ற பதிகத்தைப் பாடினார். பத்துப் பாடல்களிலும் கதவு திறக்கப்படவேயில்லை. இறுதியில் “இரக்கமொன்றிலீர்” என்று பாட மணிக்கதவம் திறந்தது. ஞானசம்பந்தர் “சதுரம் மறைதான்” என்ற பதிகம் பாடினார் கதவும் திருக்காப்பு செய்தது.




திருமறைக்காட்டில் தங்கியிருந்த போது இறைவன் அப்பரின் கனவில் தோன்றி திருவாய்மூருக்கு வருமாறு பணித்தார். இறைவன் கட்டளையை ஏற்று அப்பர் செல்ல, ஆளுடைப் பிள்ளையும் தொடர்ந்தார் இருவருக்கும் இறைவன் திருவாய்மூரில் இடபரூபராய்க் காட்சி கொடுத்தார்.




திருநாவுக்கரசர் பெருமான் பழையாறை வந்தணைந்தார். அங்குள்ள வடதளி சிவாலயத்தை மறைத்து சமணர்கள் தங்கள் பாழியை அமைத்து சிவனடியார்கள் இறைவனைத் தொழ இயலாத நிலையை உருவாக்கி இருந்தனர். இதனைக் கேள்விப்பட்ட நாவுக்கரசப் பெருமான் சிவபெருமானை நோக்கி சமணர்களை அழித்து சிவனடியார்கள் உள்ளே செல்ல ஏற்பாடு செய்யுமாறு வேண்டி, அதுவரை அங்கிருந்து செல்வதில்லை என்று அங்கேயே உண்ணாவிரதம் இருந்தார். மன்னனின் கனவில் இறைவன் ஆணையிட்டமையால் அங்கிருந்த ஆயிரம் சமணர்களோடு சமணர் பாழி அழிக்கப்பட்டது.



பலத்தலங்களுக்குச் சென்ற நாவுக்கரசர் காவிரி ஆற்றைக் கடந்து திருப்பைஞ்ஞீலிக்குச் சென்றுகொண்டிருந்தார். பசியாலும் தாகத்தாலும் மிகவும் வாடி வதங்கினார். சிவபெருமான் வழியில் ஒரு பூஞ்சோலையையும் நீர்நிலையையும் ஏற்பாடு செய்தார். ஒரு வயோதிக அந்தணர் வடிவில் வந்த சிவபெருமான் அவருக்கு பொதி சோறு கொடுத்து உண்ணவும், குளத்து நீரைப் பருகி தாகம் தணிக்கவும் செய்தார். தாமும் திருப்பைஞ்ஞீலிக்குத் தான் செல்கிறோம் என்று கூறி வழிகாட்டிச் சென்றார். திருக்கோயிலை அடைந்ததும் அந்தணர் மறைந்தருளினார். வந்தவர் சிவபெருமான் தான் என்பதைத் திருநாவுக்கரசர் உணர்ந்து, பதிகம் பாடி, விழுந்து வணங்கி இன்ப வெள்ளத்துள் திளைத்தார்.



திருநாவுக்கரசர் பெருமானார் கயிலையைக் காண வேண்டும் என்ற பேராவல் காரணமாக வடதிசை நோக்கி காடுமேடு கடந்து நடக்க ஆரம்பித்தார். உடல் மெலிந்து தளர்ந்தார். மனம் தளராமல் ஊர்ந்து சென்றார். வழியில் எம்பெருமான் ஓர் முனிவர் போல தோற்றமெடுத்து, “மானிடா! சென்றடைய முடியாத மலை அக்கயிலை மலை, எனவே திரும்பிச் செல்க” என்று கூறினார். நாவுக்கரசர் உறுதிப்பாட்டுடன் கயிலைக் காட்சியைக் காணாது திரும்பேன் என்று கூறினார்.



இவரது உறுதிப்பாட்டைக் கண்ட இறைவன் அங்கேயே ஒரு பொய்கையை அமைத்தார். இந்தப் பொய்கையில் மூழ்கி, திருவையாறுக் குளத்தில் எழும்போது கயிலைக்காட்சிக் கிடைக்கும் என்றார். நாவுக்கரசரும் அந்தப் பொய்கையில் மூழ்கி திருவையாற்றில் எழுந்தார். திருவையாற்றில் இறைவனார் மாதொருபாகனாய் இடபரூபராய்த் திருக்கயிலாயக் காட்சியை அவருக்கு நல்கினார். நாவுக்கரசர் “மாதர் பிறைக் கண்ணியானை” என்று தொடங்கும் அற்புதமான பதிகத்தைப் பாடி மகிழ்ந்தார்.



திருப்பூந்துருத்திக்குத் திருஞானசம்பந்தர் வரும்பொழுது அவரின் முத்துச்சிவிகையைத் தாங்கிவரும் அடியார்களில் ஒருவராக அப்பரும் சிவிகையைத் தாங்கிவந்தார். பின்னர் இதனை அறிந்து கொண்ட ஞானசம்பந்தர் உடனே இறங்கி இருவரும் ஒருவருக்கொருவர் வணங்கும் காட்சி நாவுக்கரசரின் அன்பின் உச்சம். ஆலவாய் தரிசனத்துக்குப் பின் திருப்புகலூரில் உழவாரப்பணி செய்யும் நாட்களில் பொன், நவமணிகள், அரம்பையர்களைப் பொருட்டாக மதியாமல், தம் உள்ளத்தின் நிலைமையினின்று மாறுபடாமல் தம் உழவாரப்பணியில் நிலைத்து நின்றார்.



திருப்புகலூர் இறைவன் தம்மை ஆட்கொள்வான் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. ஒரு சித்திரைச் சதய நாளில் “எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ” என்ற பதிகத்தைப் பாடினார். “புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்” என்று பாடி சிவலிங்கத் திருமேனியில் தோன்றிய சோதிப் பிழம்பில் ஐக்கியமானார். அடியார்கள் அர கர என்ற கோசம் எழுப்பினர். வானவர்கள் மலர் மாரி பொழிந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி !போற்றி!

## திருநாவுக்கரசர் புராணம்

திருநாவுக்கரசு வளர்திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல் உறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக்குரை செய்ய ஒண்ணாமை உணராதேன்

## திருநாவுக்கரசர் அவதாரம்

திலகவதியார் பிறந்து சிலமுறை யாண்டகன்றதற்பின்
அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல் பின்
மலருமருள் நீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்.

## திருநாவுக்கரசரின் உழவாரப்பணி

மார்பாரப்பொழி கண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற்றாளே சார்வான
திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும்ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச்செல்வார்.

## திருநாவுக்கரசர் சம்பந்தப்பெருமானின் சிவிகையைச் சுமந்து வருதல்

திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத்திக்
கருகாக எழுந்தருளி எங்குற்றார் அப்பர்என
உருகா நின்று உம்அடியேன் உம்அடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற்றேன் என்றார்.

## திருநாவுக்கரசர் சிவனின் கீழ் அமர்ந்திருத்தல்

மண்முதலாம் உலகேத்த மன்னு திருத்தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார்

திருச்சிற்றம்பலம்.

நூல் வெளியீடு : சிவத்திரு அபிலாஷ் சிவலிங்கம் சிங்கப்பூர்
நூல் தொகுப்பு : சிவத்திரு சு.நாகராஜன், அக்கரை, சுசீந்திரம்
வண்ண ஓவியம் : கலைநன்மணி திரு.வை.கோபாலகிருஷ்ணன் கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்டம்
தட்டச்சு : சிவத்திருமதி நா.சுப்ரியாகோபால், சென்னை.









ISN 978-981-18-5630-3
email: sivayanama.thirumurai@gmail.com
monacreativestudio@gmail.com